**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தாட்கோ – 2022-2023-ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 200 நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்கள் நிலம் வாங்க ரூ.10.00 கோடி மானியம் வழங்குவது – நிதி ஒதுக்கீடு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை**

அரசாணை (நிலை) எண். 79 நாள்:10.09.2022

சுபகிருது வருடம், ஆவணி 25 ஆம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். ஜி1/ 1952/2022, நாள்.27.05.2022 மற்றும் 18.07.2022.

*******

ஆணை:-

2022-2023-ஆம் ஆண்டிற்கான துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் கீழ்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

**நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும். ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 200 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள்.**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவில், நில உடைமை, சமூக நிலை உயர்வினை காட்டும் அளவுகோல் என்பதால், ஆதிதிராவிடர் மக்களின் நில உடமையினை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், ஏற்கெனவே அவர்களின் பெயரில் நிலம் இருந்தாலும், நஞ்சையாக இருப்பின் 2.5 ஏக்கர் அளவுக்கு மிகாமலும், புஞ்சையாக இருப்பின் 5 ஏக்கருக்கு மிகாமலும், பயனாளிகளின் பெயரிலேயே நிலம் வாங்கிட "**நிலம் வாங்கும் திட்டம்**" தாட்கோவில் ஒன்றிய அரசின் SCA to SCSP திட்டத்தில் நிதி வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் ஒன்றிய அரசு 2021-2022-ஆம் ஆண்டு திட்ட வரையறையில், PMAJAY என்கிற Prime Minister Anucuchit Jaati Abhyuday Yojana என்ற திட்டத்தில், SCA to SCSP பிரிவில் நிலமில்லாத ஆதிதிராவிட விவசாய தொழிலாளர்கள் 1 முதல் 3 ஏக்கர் வரை, விவசாய நிலம் வாங்குவதற்கு ரூ.10.00 இலட்சம் அளவுக்கு திட்ட மதிப்பீட்டில் 75% மானியம் அல்லது ரூ.7.5 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும் வகையில் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசால் ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்பதால், தற்பொழுது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்கும் 200 நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்களுக்கு சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மானியம் வழங்க ரூ.10.00 கோடி மாநில அரசு நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, 200 நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்களுக்கு சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மானியம் வழங்க ரூ.10,00,00,000/- (ரூபாய் பத்து கோடி மட்டும்) மாநில அரசு நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி-3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

" 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 – ஆதி திராவிடர் நலன் – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் - AF – ஆதிதிராவிடர் விவசாய தொழிலாளர்களுக்கு மானியம் வழங்குதல் – 309 – உதவித்தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (IFHRMS த.தொ.கு 222501789 AF 30903) – ரூ.8,10,00,000/-"

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் - AE – பழங்குடியினர் விவசாய தொழிலாளர்களுக்கு மானியம் வழங்குதல் – 309 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (IFHRMS த.தொ.கு 222502796 AE 30903) – ரூ.1,90,00,000/-"

5. மேலே, பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு (பொது-I)) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாக கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"-ஐ பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு (பொது-I)) துறைக்கு அனுப்பி வைக்குமாறும், மேலும், இக்கூடுதல் செலவினத்தினை 2022-2023-ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ஆதி(ம)பந/வ.செ.(பொது-I)) துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பு 2225 01 800 MCற்கு ஆதி திராவிடர் நல இயக்குநர் மற்றும் 2225 02 796 AEற்கு பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரிகளாவார்கள். சம்பந்தப்பட்ட மாவட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூலக் கணக்கு அலுவலர்

மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோவின் கீழ்க்காணும் அலுவலர் பெயரில் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் IFHRMS-ல் மின்னணு பணப்பரிவர்த்தனை மூலம் எதிர்வரவாக வரவு வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் / பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

K – வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் – 8443-00-உரிமையியல் வைப்புத் தொகைகள் – 800 – பிற வைப்புத் தொகைகள் – BY – தமிழ்நாடு வீட்டு வசதி வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தாட்கோ) – 801 வரவுகள் – 02 வட்டி பெறாதவை. 802- வழங்குதல் -02- வட்டி பெறாதவை.

(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 801 02) (Receipt)

(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 802 02) (Outgo)

8. மேலே பத்தி-3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர்/பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மேலும், பத்தி-3-இல் தெரிவிக்கப்பட்டவாறு அரசு மானியத்தில் விவசாய நிலம் வாங்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள், தங்கள் நிலங்களை அடுத்து பத்து ஆண்டுகளுக்கு விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் கூடிய உறுதிமொழி ஆவணம் பெறப்பட்ட பின்னர் இத்திட்டத்தினை செயல்படுத்திடவும், மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்த இணைப்பில் உள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.41482/ நிதி (ஆதி(ம)பந)/2022, நாள்.06.09.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1165 (ஆயிரத்து நூற்று அறுபத்து ஐந்து) (IFHRMS ASL No.2022091165)

//ஆளுநரின் ஆணைப்படி//

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5
மேலாண்மை இயக்குநர் , தாட்கோ , சென்னை -18,
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் ,
(இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை 9/18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை-8
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்) (சேலம், தர்மபுரி, நாமக்கல், திருச்சி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர்)

நகல் :-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர் , சென்னை -9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கூடுதல் தலைமைச் செயலாளரின்
தனிச் செயலாளர் , சென்னை-9
நிதி (ஆதி (ம )பந) / வரவு-செலவு (பொது-I/II/வ.வ-I) த்துறை , சென்னை -9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
(அநமு -1 / ஆதிந-5 / ப.மே 1 ) த் துறை ,சென்னை-9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சிவசங்கரி 12/9/2022
பிரிவு அலுவலர்

12/9/22

## இணைப்பு -I

**அரசாணை (நிலை) எண்.79, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை, நாள்.10.09.2022.**

### வழிகாட்டு நெறிமுறைகள்

### Land Purchase Scheme (LPS)/ நிலம் வாங்கும் திட்டம்

ஆதிதிராவிட மக்களின் நில உடைமையை அதிகரிக்கும் பொருட்டு, இத்திட்டம் கீழ்க்கண்ட தகுதி/ நிபந்தனைகளுடன் செயல்படுத்தப்படுகிறது.

**தகுதி:-**

- ஆதிதிராவிட இனத்தை சேர்ந்த மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மகளிர் இல்லாத குடும்பங்களில் கணவர் அல்லது மகன்களுக்கு வழங்கப்படும்.
- 18-65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும். விவசாயக் கூலி வேலை செய்பவராகவும் இருக்கலாம்.
- விண்ணபதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- ஒருவர் ஒரு முறை மட்டுமே மானியம் பெற தகுதியுடையவர். ஒரு திட்டத்தின் கீழ் ஒரு முறை மானிய உதவி பெற்றால், பின்னர் அவர் தாட்கோ செயல்படுத்தும் சிறப்பு மைய உதவியுடனான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியற்றவராகிறார்.

**நிபந்தனைகள்:-**

இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்கும் போது கீழ்க்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

- வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதாரரே தெரிவு செய்ய வேண்டும்.
- நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அல்லாத பிற இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் நிலமற்றவர்கள் அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கலாம்.

- சார்பதிவாளர் அலுவலக இணையதளம் வாயிலாக அல்லது நேரில் நிலத்தின் வழிகாட்டி மதிப்பு மற்றும் சந்தை மதிப்பு பெறப்பட வேண்டும்.
- நிலத்தின் சந்தை மதிப்பீட்டின்படி, திட்டத் தொகையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மானியம் விடுவிக்கப்படும்.
- விண்ணப்பம் செய்த மகளிரின் பெயரில் அல்லது மகன்கள் அல்லது கணவர் பெயரில் மட்டுமே வாங்கப்படும் நிலம் பதிவு செய்யப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100% முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் விலக்கு அளிக்கப்படுகிறது.
- வாங்கப்படும் நிலத்தினை விண்ணப்பதாரர் 10 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது. எனவே நிலம் வாங்கியவுடன் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் சார்பதிவாளரிடம் தெரிவித்து இந்நிலம் 10 வருடங்களுக்கு விற்பனை செய்யாதவாறு வில்லங்கம் (Lien) ஏற்படுத்த வேண்டும்.

**விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:-**

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| மாவட்ட பதிவாளர் (நிலம்) | உறுப்பினர் |
| மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நே.மு.உ.(நிலம்) | உறுப்பினர் |
| இணை இயக்குநர், வேளாண்மைத் துறை | உறுப்பினர் |
| இணை இயக்குநர், கால் நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

**<u>சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்:-</u>**

தாட்கோ, மாவட்ட மேலாளர், மானியத் தொகை விடுவித்த 30 நாட்களில் விண்ணப்பதாரர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டதை, சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் சொத்து உருவாக்கத்தின் ஆவணம் மற்றும் சான்றிதழ்களோடு கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு-II

**அரசாணை(நிலை)எண். 79, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்(சிஉதி)துறை, நாள்.10.09.2022.**

**நில விற்பனைத் திட்டம் (இலக்கு)**

| வ. எண் | மாவட்டம் | ஆதிதிராவிடர் வகுப்பினர் | | பழங்குடியினர் வகுப்பினர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. |
| 1 | அரியலூர் | 2 | 1000000 | 1 | 500000 | 3 | 1500000 |
| 2 | சென்னை | - | 0 | - | 0 | - | 0 |
| 3 | கோயம்புத்தூர் | 6 | 3000000 | 1 | 500000 | 7 | 3500000 |
| 4 | கடலூர் | 9 | 4500000 | 1 | 500000 | 10 | 5000000 |
| 5 | தருமபுரி | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 6 | திண்டுக்கல் | 5 | 2500000 | 1 | 500000 | 6 | 3000000 |
| 7 | ஈரோடு | 4 | 2000000 | 1 | 500000 | 5 | 2500000 |
| 8 | காஞ்சிபுரம் | 5 | 2500000 | 1 | 500000 | 6 | 3000000 |
| 9 | செங்கல்பட்டு | 5 | 2500000 | 1 | 500000 | 6 | 3000000 |
| 10 | கன்னியாகுமரி | 1 | 500000 | 1 | 500000 | 2 | 1000000 |
| 11 | கரூர் | 2 | 1000000 | 1 | 500000 | 3 | 1500000 |
| 12 | கிருஷ்ணகிரி | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 13 | மதுரை | 5 | 2500000 | 1 | 500000 | 6 | 3000000 |
| 14 | நாகப்பட்டினம் | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 15 | மயிலாடுதுறை | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 16 | நாமக்கல் | 4 | 2000000 | 1 | 500000 | 5 | 2500000 |
| 17 | நீலகரி | 3 | 1500000 | 2 | 1000000 | 5 | 2500000 |
| 18 | பெரம்பலூர் | 2 | 1000000 | 1 | 500000 | 3 | 1500000 |
| 19 | புதுக்கோட்டை | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 20 | இராமநாதபுரம் | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 21 | சேலம் | 7 | 3500000 | 1 | 500000 | 8 | 4000000 |
| 22 | சிவகங்கை | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 23 | தஞ்சாவூர் | 9 | 4500000 | 1 | 500000 | 10 | 5000000 |
| 24 | தேனி | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 25 | திருவள்ளூர் | 9 | 4500000 | 1 | 500000 | 10 | 5000000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 26 | திருவாரூர் | 10 | 5000000 | 1 | 500000 | 11 | 5500000 |
| 27 | தூத்துக்குடி | 4 | 2000000 | 1 | 500000 | 5 | 2500000 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 5 | 2500000 | 1 | 500000 | 6 | 3000000 |
| 29 | திருநெல்வேலி | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 30 | தென்காசி | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 31 | திருப்பூர் | 4 | 2000000 | 1 | 500000 | 5 | 2500000 |
| 32 | திருவண்ணாமலை | 6 | 3000000 | 1 | 500000 | 7 | 3500000 |
| 33 | வேலூர் | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 34 | இராணிப்பேட்டை | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 35 | திருப்பத்தூர் | 3 | 1500000 | 1 | 500000 | 4 | 2000000 |
| 36 | விழுப்புரம் | 6 | 3000000 | 1 | 500000 | 7 | 3500000 |
| 37 | கள்ளக்குறிச்சி | 6 | 3000000 | 1 | 500000 | 7 | 3500000 |
| 38 | விருதுநகர் | 4 | 2000000 | 1 | 500000 | 5 | 2500000 |
| | மொத்தம். | 162 | 8,10,00,000 | 38 | 1,90,00,000 | 200 | 10,00,00,000 |

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

சு. [signature] 12/9/2022
பிரிவு அலுவலர்.

[initials] 12/9/22